# கருத்திட்ட தகவல் பத்திரம்

கருத்திட்ட தகவல் பத்திரம் (PDS) கருத்திட்டம் அல்லது நிகழ்ச்சித்திட்டம் பற்றிய சுருக்கமான தகவலை உள்ளடக்கியுள்ளது: PDS பணியானது இயங்கும் நிலையில் காணப்படுகிறது, சில தகவல்கள் ஆரம்ப பதிப்பில் உள்ளடக்கப்படுவதில்லை ஆனால் அது கிடைக்கத்தக்க நிலையை அடையும் போது சேர்த்துக்கொள்ளப்படும். உத்தேச கருத்திட்டங்கள் பற்றிய தகவலானது தற்காலிகமானதும் சுட்டிக்காட்டக்கூடியதுமானமாகும்.

| | |
|---|---|
| **PDS உருவாக்கப்பட்ட திகதி** | _ |
| **PDS இற்றைவரைப்படுத்தப்பட்ட திகதி** | 29 செப்ரம்பர் 2014 |

| | |
|---|---|
| **கருத்திட்ட பெயர்** | பசுமைச் சக்திவலு அபிவிருத்தி மற்றும் சக்தி வினைத்திறன் மேம்பாடு முதலீட்டுத் திட்டம் |
| **நாடு** | இலங்கை |
| **கருத்திட்ட/நிகழ்ச்சித்திட்ட இலக்கம்** | 47037-003 |
| **நிலைமை** | அங்கீகரிக்கப்பட்டது |
| **பூகோளவியல் அமைவிடம்** | _ |

ஏதேனும் நாடொன்றின் நிகழ்ச்சித்திட்டம் அல்லது மூலோபாயத்தை உருவாக்குதல், ஏதேனும் ஒரு கருத்திட்டத்திற்கு நிதியளித்தல், அல்லது பதவியை உருவாக்குதல் அல்லது இந்த ஆவணத்தில் ஒரு குறிப்பிட்ட ஆட்சிபரப்பு அல்லது பூகோளவியல் பிரதேசத்தை மேற்கோள் காட்டி, ஆசிய அபிவிருத்தி வங்கியானது ஒரு ஆட்சிபரப்பின் அல்லது பிரதேசத்தின் சட்டம் அல்லது ஏனைய நிலைமைகளுக்கு ஏற்ப தீர்மானங்களை உத்தேசிக்காது.

| | |
|---|---|
| **பிரிவு** | சக்தி வலு |
| **உப பிரிவு** | மின்சார அனுப்பீடு மற்றும் விநியோகம்<br>சக்தி வலு வினைத்திறனும் பேணுதலும்<br>பாரிய நீர்சக்தி வலு உற்பத்தி |
| **மூலோபாய அட்டவணை** | சுற்றாடல் நிலைத்தகு வளர்ச்சி (ESG)<br>இணைந்த பொருளாதார வளர்ச்சி (ஐநுபு) |
| **மாற்றத்தின் உந்து விசைகள்** | ஆட்சி முறை மற்றும் ஆற்றல் மேம்பாடு(GCD)<br>அறிவுத் தீர்வுகள் (KNS)<br>பங்குடைமை ீயுசு) |
| **பால்நிலை சமத்துவம் மற்றும் முக்கிய வகைகள்** | வகை 4: பால் நிலை வகைகள் இல்லை (பேநு) |

## நிதியளித்தல்

| உதவியின் வகை/ நடைமுறை | அங்கீகாரத்தின் இலக்கம் | நிதி வழங்கலின் மூலம் | அங்கீகரிக்கப்பட்ட தொகை (ஆயிரம்) |
|---|---|---|---|
| கடன் | 0084 | ஆசிய அபிவிருத்தி நிதியம் | 84,000 |
| கடன் | 0084 | சாதாரண மூலதன மூலவளங்கள் | 216,000 |
| கடன் | 0084 | பிரஞ்சு அபிவிருத்தி நிறுவனம் | 60,000 |
| _ | _ | சரிநிரப்பு பங்கு மூலதனம் | 80,000 |
| **மொத்தம்** | | | **US$440,000** |

## சுற்றாடல் மற்றும் சமூக பிரச்சினைகளின் சுருக்கம்

**சுற்றாடல் நோக்கங்கள்**
வகை A

**சுயவிருப்பமற்ற மீள்குடியேற்றம்**
வகை A

**ஆதிவாசிகள்**
வகை C

## நலன்பிரதிநிதி தொடர்பாடல், பங்களிப்பு மற்றும் ஆலோசனை

**திட்ட வடிவமைப்பின்போது**

கிராம சமுதாயம், உள்ளூர் வதிவாளர்கள், கிராமங்களில் உள்ள பெண்கள் குழு, அரச உத்தியோகத்தர் பிரதிநிதிகள், நிறைவேற்று மற்றும் அமுலாக்கல் முகவர்கள் போன்ற பல தரப்பட்ட நலன் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடப்பட்டது. பல அனுப்பீடு மற்றும் விநியோக உபத் திட்ட அமைவிடங்களில் உள்ள 34 சமூகங்களுடன் கவனக் குழுக்கள் கலந்துரையாடல் நடாத்தியது. புதிய திட்டம் மற்றும் நிகழ்ச்சித் திட்டம் பற்றி நலன் பிரதிநிதிகளுக்கு அறிவிக்கப்பட்டது. உபசார சமூகம் உள்ளடங்கலாக நீர்சக்தி வலுத் திட்டத்திற்காக முறையான மற்றும் தனிப்பட்ட ரீதியிலான கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டது. நீர்சக்தி வலுத் திட்ட அமைவிடத்தில் காணி கையகப்படுத்தல் மற்றும் மீள்குடியமர்த்தல் அமுலாக்கலின் போது கிராமக் குழுவொன்று முக்கிய நலன் பிரதிநிதியாக பங்கேற்க உருவாக்கபட்டது

**திட்ட அமுலாக்கலின் போது**

முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தும் பொழுது குடிமுறை சமூகம் உட்பட சகல நலன் பிரதிநிதிகளுடனும் கலந்துரையாடல் தொடரும். மொறகொல்லவில் உள்ள நீர்சக்தி வலு திட்டத்திற்காக ஒரு வீடமைப்புக் குழு, மீள் குடியேற்றக் குழு மற்றும் பாதிக்கப்பட்ட மக்களின் பிரதிநிதித்துவம் ஆகியன இலங்கை மின்சார சபையுடன் (CEB) உன்னிப்பாக இணைந்து காணி கையகப்படுத்தல் மற்றும் மீள்குடியேற்ற பிரச்சினைகள் நடைமுறைப்படுத்தலின் போது செயற்படுவர். வன ஜீவராசி நலன் பிரதிநிதிகள் ஸ்தாபனங்களுடன் நீர்த்தேக்கங்களின் பாதுகாப்பினை மதிப்பிடவும் ஊநுடீ க்கும் மகாவலி அதிகாரத்திற்கும் இடையில் கீழ் நீரோட்டத்தினை உறுதிப்படுத்தி மொறகொல்ல அணைக்கட்டின் அருகிலோடும் நீரில் அருகி வரும் மீன் பராமரிப்புக்கான ஒரு பொருத்தமான பொறிமுறையை உருவாக்குவது சம்பந்தமாக தொடர்ந்து கொண்டிருக்கும் மற்றும் மேலும் தொடரப்போகும் கலந்துரையாடல்கள் நடைபெறுகின்றது. நிகழ்ச்சித்திட்ட அமுலாக்கலின் போது தகவல் வெளியிடல் தொடரப்படும்.

## விபரம்

அண்மைக் காலத்தில் இலங்கை அதன் சக்தி வலுத்துறையில் முன்னேற்றமடைந்ததுடன் 1990 ஆம் ஆண்டில் அடைந்த 29% உடன் ஒப்பிட்டு நோக்கும் பொழுது 94% (2012) தேசிய மின்னிணைப்பு விகிதாசாரத்தினை எய்துள்ளது. எவ்வாறாயினும் எதிர் நோக்கும் நீண்ட காலச் சவாலானது மிகப் பெருஞ் செலவு பிடிக்கின்ற, மேற் கொண்டு வளர்ச்சியடையுந் திறனற்ற எரிபொருளில் மிகுந்து தங்கியிருப்பதைக் குறைத்துக் கொள்வதாகும். சக்திவலுத்துறை (அ) வளர்ந்து கொண்டே செல்லும் மின்சாரத் தேவைகளை குறைந்த விலையிலும், ஏற்றுக் கொள்ளக் கூடிய நம்பிக்கைத் தன்மையுடைய விகிதாசாரத்திலும் பெற்றுக் கொடுப்பதற்காகவும் (ஆ) நீண்ட காலத்திற்கான நிலைத்தகவை அடைவதற்காகவும், போராடிக் கொண்டு இருக்கின்றது. சக்திவலு உற்பத்தியில் வெப்ப சக்தியின் சேர்வைப் பங்கு 1995 இல் 6% ஆக இருந்து 2012 இல் 59% ஆக வளர்ச்சியடைந்ததனால் ஒரு பெரிய ஆகு செலவுடனான சக்திவலுவிற்கு அடித்தளமாகின்றது. மிகுந்த செலவுடனான எரிபொருள் எண்ணெயால் இயங்கும் வெப்ப பொறித்தொகுப்புகள் மூலம் வளர்ந்து வரும் கேள்வி அதிகமாக பூர்த்தி செய்யப்படுகின்றது. இது நாட்டின் நீண்டகாலத்திற்கான சக்திவலு மற்றும் சூழல் பாதுகாப்பிற்கு சாதகமானதும் மற்றும் நிலைத்தகுவானதும் அல்ல. உற்பத்திச் சேர்வையை பல்வகைப்படுத்துவது, அடிப்படையான புதுப்பிக்கத்தக்க சக்திவலு மூலங்கள், மேம்படுத்தப்பட்ட வலைப்பின்னல் செயல்திறன், குறைக்கப்பட்ட தொழில் நுட்ப நட்டங்கள் மற்றும் வழங்கல் மற்றும் கேள்வி பக்க முகாமைத்துவம் தான் இந்த நிலையை சரி செய்வதற்கான ஒரே ஒரு வழியாகும். அத்துடன் அனுப்பீட்டு வலைப்பின்னலின் விரிவாக்கமும் நவீனமயப்படுத்தலும், குறிப்பாக வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ள முன்னர் முரண்பாடுளினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் தேவைப்படுகின்றது. குறைந்த தரத்தில் மின்சார வழங்கல்களைப் பெற்றுக் கொண்டிருக்கும் குடும்பங்கள் வாழும் கிராமப்புறங்களிற்கு சக்திவலுவினை விரிவாக்கி வழங்க 33 கிலோ வோல்ட் (KV) இடைத்தர அளவு மின்னழுத்த வலைப்பின்னல் தேவையாகின்றது. சக்திவலுப் பகுதி நிலைத்தகுவாகச் செயல்பட இலங்கை மின்சாரச் சட்டம், 2009 இற்கு அமைய அரசாங்கம் நிதி, முகாமைத்துவ மற்றும் நிறுவனங்களின் சீர்திருத்தங்களை தொடர்கின்றது.

## நாடு/பிராந்தியம் என்பவற்றின் மூலோபாயத்திற்கான திட்ட அடிப்படை யுக்தி மற்றும் இணைப்பு நிலை

2006 இல் 10 வருட அபிவிருத்தி சட்டகம் தயாரிக்கப்பட்ட பின் 2010 இல் புதுப்பிக்கப்பட்டதன் அடிப்படையில் இலங்கைக்கு தேசீய மட்டத்திலான ஒரு முதலீட்டு வரைச் சட்டம் உள்ளது. இவ்வரைச் சட்டம் தேசிய சக்தி வலுக் கொள்கை மற்றும் உத்திகளுடன் இணைந்துள்ள நீண்ட கால முதலீட்டு நிகழ்ச்சித் திட்டம், துறை சார் மார்க்க வரைபடம், என்பவற்றுடன் பொருத்தமான கொள்கை மற்றும் சீர்திருத்த நடவடிக்கைகள் என்பனவற்றை உள்ளடக்குகின்றது. இதன் நோக்கமானது (i) 2020 ஆம் ஆண்டளவில் சக்திவலு வழங்கலாற்றலை கிட்டத்தட்ட 6,400 MW க்கு உயர்த்துவதுடன் மூன்று நிலக்கரி எரிப்பு பொறிக்கோப்புகளின் கூட்டு அடித்தடை ஆற்றல் கிட்டத்தட்ட 2,000 MW க்கு உயர்த்துவதினால் உற்பத்திச் செலவைக் குறைப்பதும் (ii) 2020 ஆம் ஆண்டளவில் மரபு வழியற்ற புதுப்பிக்கத்தக்க சக்தி வலு மூலங்கள் மூலம் மின்தொகுப்பிற்குக் கிடைக்கும் பங்கை 20% ற்கு உயர்த்துதல் (iii) 2020 ஆம் ஆண்டளவில் வலைப்பின்னலின் மொத்த விரயத்தினை 10% இற்கு குறைத்தல். 2000 MW நிலக்கரி எரிப்பு ஆற்றலை முன்னேற்றும் அரசாங்கத்தின் எண்ணமானது ஆகு செலவு மீட்பை நோக்கி செயல்படவும் தற்போது ஏற்படும் வெப்ப சக்தி வலு உற்பத்திக்கான அதிக ஆகுசெலவினைக் குறைத்து 2017 இலிருந்து ஆகு செலவு மீட்பு அடைவதாகும். புதுப்பிக்க சக்தி வலு அபிவிருத்திக்குக் குறை நிரப்பாக செயற்பட்டுச் சக்தி வலுப் பாதுகாப்பினை அடைவதற்கு உதவும். ஆகுசெலவு மீட்பு மூலோபாயத்தின் ஒரு பகுதியாக அரசாங்கம் ஏப்ரல் 2013 இலிருந்து சில்லறை மின்சாரக் கட்டணப் பட்டியலை சராசரியாக 35% இனால் கூட்டியது. அரசாங்கம் வழங்கல் ஆற்றலைக் கூட்டும் நோக்கத்துடன் தற்போதைய ஆகுசெலவு மிகுந்த, வினைத்திறனற்ற எண்ணெய் எரிப்பு சக்திவலு உற்பத்தி பொறிக்கோப்புகளிற்குப் பதிலாக செலவு குறைந்த நிலக்கரி எரிப்பு பொறிக்கோப்புகளை அமைக்கும் அதே வேளையில் வழங்கலிற்கான ஆற்றலின் மிகுதி புதுப்பிக்கக்கூடிய மூலங்கள் மூலம் கிடைக்க வேண்டும் (அத்துடன் எதிர்காலத்தில் எண்ணெய் எரிப்பு பொறிக்கோப்புகளிலிருந்து எரிவாயு பொறிக்கோப்புகளிற்கு மாற்றுதல்). தற்போதைய 28%

சக்திவலு மரபு வழி நீர்-சக்தி வலு உற்பத்தியுடன் மரபு வழி சாரா புதுப்பிக்கத்தக்க சக்திவலு மூலங்களிலிருந்து கிடைப்பெறும் சக்திவலு 20% இனால் கூடுவது எதிர் காலத்தில் உள்நாட்டுச் துாய சக்திவலு மூலங்களிலிருந்து அதிக மின்சார உற்பத்தி செய்யப்படுதை உறுதி செய்யும். இது சக்திவலு பாதுகாப்பு நிகழ்ச்சி நிரல் பற்றிய இக்கட்டான கேள்விக்கு பதிலாக அமையும்.

## அபிவிருத்தியின் விளைவு

துாய, நம்பகத்தன்மையுடைய, கட்டுப்படியாகக் கூடிய சக்திவலு வழங்கல்

## திட்ட பயன்

| திட்ட பயன் விபரம் | பிரதிபலனின் முன்னேற்றம |
|---|---|
| மேம்படுத்தப்பட்ட துாய சக்திவலு உற்பத்தி, முறைமை வினைத்திறன் மற்றும் நம்பகத்தன்மை | – |

## பிரதிபலன்கள் மற்றும் அமுலாக்கலின் முன்னேற்றம்

| திட்ட பெறுபேறுகளின் விபரம் | அமுலாக்கல் முன்னேற்றத்தின் நிலைமை (பெறுபேறுகள், செயற்பாடுகள், மற்றும் பிரச்சினைகள்) |
|---|---|
| மத்திய மகாணத்தில் நீர்-வலு உற்பத்தி விருத்தி செய்யப்பட்டு தொகுப்புடன் இணைக்கப்படும். மின் அனுப்புகை உள்கட்டமைப்பு மேம்படுத்தப்பட்டது. நடுத்தர மின்வலியளவு ஆற்றல் மேம்படுத்துப்படடது. சக்தி வலு ஆற்றல் வினைத்திறனின் கேள்வி பற்றிய முகாமைத்துவம் மேம்படுத்தப்பட்டது. இலங்கை மின்சார சபையின் ஆற்றலை மேம்படுத்துவதற்கு உதவப்பட்டது. | _ |

| அபிவிருத்தி நோக்கங்களின் நிலை | பொருள் ரீதியான மாற்றங்கள் |
|---|---|
| – | – |

## வியாபார வாய்ப்புகள்

| முதல் பட்டியல் திகதி | 26 Jun 2013 |
|---|---|

**ஆலோசனைச் சேவைகள்**

சர்வதேச ஆலோசகர்கள் 17.5 நபர்-மாதங்களும் தேசிய ஆலோசகர்கள் 19.0 நபர்-மாதங்களும் உள்ளடங்கலான ஒரு தொழில் நுட்ப உதவி (TA) கருத்திட்டத்திற்கு ஆலோசனை சேவைகள் நிறுவனமொன்று சேர்த்துக் கொள்ளப்படவுள்ளது. மூலதனமிடல் நிகழ்ச்சித்திட்டத்தின் சிக்கல் தன்மையினை கவனத்தில் கொண்டு, தரம் மற்றும் ஆகுசெலவு அடிப்படையில் தெரிவு முறையினுடன் எளிய முறை தொழில்நுட்ப திட்ட அறிக்கையின் அடிப்படையில் 90:10 தொழில்நுட்ப-ஆகுசெலவு மதிப்பீட்டினைப் பாவித்து இந் நிறுவனம் தெரிவு செய்யப்படும். தொழில்நுட்ப, பொருளாதார, நிதி சம்பந்தமாகத் தேவையான ஆள்வினை அதிகாரத்துடன் ஆலோசனை நிறுவனம் நடத்திக் கருத்திட்டத்தின் ஆகுசெலவு கணிப்பீடுகள், கொள்வனவுத்திட்டம், அமுலாக்கல் கால அட்டவணை ஆகியவற்றைத் தயாரிக்கும். இப்பல்தொகுதி நிதியளிப்பு வசதியின் (MFF) எதிர்பார்க்கப்படும் சுற்றாடல் மற்றும் சுயவிருப்பமற்ற மீள்குடியேற்றம் ஆகியவற்றின் வகைப்படுத்தல் A ஆதலால் சர்வதேச மற்றும் தேசீய சூழல் மற்றும் சமூக அபிவிருத்தி துறை வல்லுனர்கள் தங்கள் வெளிக்கள நடவடிக்கைளை முன்னமே ஆரம்பிப்பதற்கு ஏதுவாக தனி அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்படுவர். "ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் கடனாளிகளினால் பாவிக்கப்படும் ஆலோசகர்களிற்கான வழிகாட்டி, ஏப்ரல் 2010" இற்கமைய ஆலோசகர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

**கொள்வனவு**

ADB யின் கையகப்படுத்தல் வழிகாட்டலுக்கமைய வேலைகள், பொருட்கள் மற்றும் சேவைகள் கொள்வனவு செய்யப்படும். ADB முன் ஒப்பந்தம் செய்வற்கு அனுமதி கொடுக்கும். கொள்வனவு வழிகாட்டி உள்நாட்டு பொருள்களிற்கும் முடிவுத் திறவுகோல் ஒப்பந்தங்களிற்கும் முன்னுரிமை கொடுக்கும். அரசாங்கம் உள்நாட்டு பொருள்களிற்கும் முடிவுத் திறவுகோல் ஒப்பந்தங்களிற்கும் சலுகை கொடுக்கும் படி கேட்டுள்ளது மற்றும் கடன் உடன்படிக்கையில் ஒதுக்கீடு செய்யப்படும் அதே வேளை மேலதிக விண்ணபத்தின் விபரங்கள் ஏலப் பத்திரங்களில் உள்ளடக்கப்படும். ஏலம் கூறுவதற்கு முன்பாக நிலையான உள்நாட்டு உற்பத்திப் பொருள்கள் மற்றும் வழங்கல்கள் என்பனவற்றின் மதிப்பீட்டுச் செலவுத் தொகை அந்த வேலைகளிற்கான 60% ற்குச் சமனாக அல்லது அதைவிடக் கூட இருக்குமாயின் அது தனிப் பொறுப்பு ஒப்பந்தங்களின் உள்நாட்டு உற்பத்திப் பொருள்களிற்கு பொருந்தக் கூடியது. நீர்சக்திவலுப் பொறி, 132 மஏ மற்றும் 220 மஏ அனுப்புகைக் மின்கம்பிகள் 220/132/33 KV மின்தொகுப்பு உபநிலையங்கள் 33 kV விநியோக வழிகள் மற்றும் நிலைதாங்கிகள், DSM முன்னோடித் உப திட்டங்கள் என்பனவற்றை கொள்வனவுப் பொதிமுறைக்கு பல்நாட்டுப் போட்டி ஏல (ICB) வழிமுறை பாவிக்கப்படும். நீர்சக்தி வலுவினால் சக்தி வலு உற்பத்தி மற்றும் மற்றைய உப திட்டங்கள் நடைமுறைப்படுத்தல் தொழில்நுட்ப, கண்காணிப்பு உதவிகள் மற்றும் சக்திவலு பிரிவு முன்னேற்றத்திற்கான ஆற்றல் மேம்படுத்தல் எல்லாவற்றிற்குமான ஆலோசனைகளைப் பெற CEB, ஆலோசனைச் சேவையாளர்களைச் சேர்த்துக் கொள்ளும். ஆலோசனைச் சேவையாளர்களின் பாவனை பற்றிய ADB யின் வழிகாட்டிகளிற்கமைய ஆலோசனைச் சேவையாளர் சேர்த்துக்கொள்ளப்படுவர்

**கொள்வனவு மற்றும் ஆலோசனை அறிவித்தல்கள்**

http://www.adb.org/projects/47037-003/business-opportunities

## நேர அட்டவணை

| | |
|---|---|
| **கோட்பாட்டு ஒத்திசைவு** | 25 ஜுன் 2013 |
| **உண்மை ஆய்வு** | 17 பெப்ரவரி 2014 தொடக்கம் 21 பெப்ரவரி 2014 வரை |
| **முகாமைத்துவ மீளாய்வு கூட்டம்** | 15 யூலை 2014 |
| **அங்கீகாரம்** | _ |
| **இறுதி மீளாய்வு பணி** | _ |

## ■ திட்ட எய்துகைகள்

| அங்கீகார இலக்கம் | அங்கீகாரம் | கையொப்பம் | பயனுறுதி | முடிவு | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | மூலம் | திருத்தப்பட்ட | உண்மையான |
| – | – | – | – | – | – | – |

## ■ பயன்பாடு

| திகதி | அங்கீகார இலக்கம் | ADB (US$ ஆயிரம்) | ஏனையவை (US$ ஆயிரம்) | தேறிய சதவீதம் |
|---|---|---|---|---|
| **திரண்ட ஒப்பந்த வழங்கல்** | | | | |
| – | – | – | – | – |
| **திரண்ட பகிர்வுகள்** | | | | |
| – | – | – | – | – |

## ■ உடன்படிக்கைகளின் நிலைமை

பின்வரும் வகைகளின் கீழ் உடன்படிக்கைகள் வகைப்படுத்தப்பட்டுள்ளன—கணக்காய்வுகுட்படுத்தப்பட்ட கணக்குகள், நலப்பாதுகாப்புகள், சமூக பிரிவு, நிதி, பொருளாதாரம் மற்றும் ஏனையவை. பின்வரும் அளவீடுகளின் பயன்படுத்தப்பட்டு உடன்படிக்கை இணக்கப்பாடு தரப்படுத்தப்படுகிறது: (i) திருப்தி—உச்ச அளவாக ஒரு விதிவிலக்கு அனுமதியுடன் இந்த பிரிவில் உள்ள அனைத்து உடன்படிக்கைகளும் இணங்கியுள்ளது, (ii) பகுதியளவு திருப்தி – உச்ச அளவாக இரு உடன்படிக்கைகள் பிரிவுடன் இணங்கவில்லை, (iii) அதிருப்தி - மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட உடன்படிக்கைகள் இந்த பிரிவில் இணங்கவில்லை. 2011 பொதுசன தொடர்பாடல் கொள்கையின் படி, கருத்திட்ட நிதி கூற்றுக்களுக்கான உடன்படிக்கை இணக்கப்பாட்டு தரப்படுத்தலானது 2012 ஏப்ரல் 2 இற்கு பின்னரான பேச்சுவார்த்தைக்கு மாத்திரம் பயன்படுத்தப்படும்.

| அங்கீகார இலக்கம் | வகை | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | பிரிவு | சமூகம் | நிதி | பொருளாதாரம் | ஏனையவை | நலப்பாதுகாப்பு | கருத்திட்ட நிதி கூற்றுகள் |
| கடன் - | – | – | – | – | – | – | – |

## ■ தொடர்புகள் மற்றும் இற்றைவரைப்படுத்தப்பட்ட விபரங்கள்

| | |
|---|---|
| **பொறுப்பான ADB உத்தியோகத்தர்** | முக்தார் கமுட்கனொவ் (mkhamudkhnov@adb.org) |
| **பொறுப்பான ADB திணைக்களம்** | தெற்கு ஆசிய பிரிவு |
| **பொறுப்பான ADB பிரிவுகள்** | சக்தி பிரிவு, (SARD) |
| **நிறைவேற்று முகவராண்மைகள்** | _ |

## தொடர்புகள்

| | |
|---|---|
| கருத்திட்ட இணையதளம் | http://www.adb.org/projects/47037-003/main |
| கருத்திட்ட ஆவணங்களின் பட்டியல் | http://www.adb.org/projects/47037-003/documents |